நகல்:-

தமிழ் நாடு அரசு

சுருக்கம்

தமிழ் நாடு அமைச்சுப் பணி - நியமனம் (நேரடி) கருணை அல்லது இரக்கத்தின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் - முதநிலை நிர்ணயித்தல்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணியாளர்-பி) துறை

அரசாணை (நிலை) எண் 951 நாள்: 14.9.1984
ஆவணி 30 - ரக்தாக்ஷி
திருவள்ளுவர் ஆண்டு - 2015.

பார்வை:

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு கடித எண் 4911/இ2/84 நாள் 27.6.1984.

------

ஆணை:

பணியில் இருக்கும்போது அரசு ஊழியர் திடீரென இறந்துவிட்டால் அவரது குடும்பத்திலுள்ள தகுதி உடைய நபர் எவராவது ஒருவர் கருணை அடிப்படையில் அரசுப் பணியில் அமர்த்தப்படலாம். அப்படி அமர்த்தப்படும் நபரின் கல்வித் தகுதிக்கேற்ப பணி அளிக்கப்படுகிறது. கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் பலர் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் ஒத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். மேற்படி இளநிலை உதவியாளர், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் முதலியவர்கள் முதலில் தற்காலிகமாக அமர்த்தப்பட்டு, பிறகு தேர்வாணையக் குழுவின் இசைவைப் பெற்று அவர்களது பணிவரன் முறைப்படுத்தப்படுகிறது. இவ்வாறு பணியில் அமர்த்தப்படும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் மற்றும் ஒத்த பணியில் அமர்த்தப்படுபவர்களின் முதநிலை, அவ்வாண்டு தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணி வேட்பாளர்களுக்குக் கீழ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதற்கேற்ப தமிழ் நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளில் எவ்வித வழிமுறையும் செய்யப்படவில்லை கருணையின் அடிப்படையில் வேலையில் அமர்த்தப்படும் பணி வேட்பாளர்களுக்குக் கீழ் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதற்கேற்ப தமிழ் நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளில் எவ்வித வழிமுறையும் பணி வேட்பாளர் அவர் பணியில் நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்திற்கொண்டு தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் கண்ட நபர்களின் இடையே முதநிலை நிர்ணயிக்கலாமா எனப் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியில், கருணையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர்களின் முதநிலை அவர்கள் எந்த நாளில் முறையாக பணியில் நியமிக்கப்பட்டாரோ, அவ்வாண்டு தேர்வாணைக் குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர் பட்டியலில் கண்ட பணி வேட்பாளர்க்கிடையே அவர் முறையாக நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்தில் கொண்டு, அவரது முதநிலையை நிர்ணயம் செய்யலாம் என அரசு ஆணை (நிலை) எண்.958, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணியாளர்-இ) துறை, நாள் 7.10.1983-ல் ஆணை இனி வெளியிடப்பட்டுள்ளது.

..2..

2. இப்போக்கு சலுகையை தமிழ் நாடு அமைச்சுப் பணியில் கருணையின் அடிப்படையில் நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் மற்றும் ஒத்த பணியிடங்களுக்கும் அளிக்கப்படலாம் என்று கருதப்பட்டது. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவும் பார்வையில் கண்ட கடிதத்தில் இக்கருத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

3. எனவே, கருணையின் அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்ற ஒத்த பணிகளில் அமர்த்தப்படும் பணி வேட்பாளர்களின் முதுநிலை அவ்வாண்டு தேர்வாணைக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்ற ஒத்த பட்டியலில் கண்ட பணி வேட்பாளர்களுக்கிடையே அவர் முறையாக நியமிக்கப்பட்ட நாளினைக் கருத்திற்கொண்டு, நிர்ணயிக்க வேண்டுமென அரசு ஆணையிடுகிறது. ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுக்கு இது பொருந்தாது.

4. இந்த ஆணை, இந்த ஆணை வெளியிடும் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு. சொக்கலிங்கம்,
அரசு தலைமைச் செயலாளர்.

/உண்மை நகல்/